அவர்களுக்குப் பதிலாக மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2010* ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

4. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2009–2010, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2009-2010* ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதி நிலை அறிக்கை அளித்தல். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2009-2010* ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை@ இம்மாமன்றத்தின்முன் வைக்கிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு

@ *562* முதல் *565* வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.

2010 ஜனவரி 11] [பேராசிரியர் க. அன்பழகன்]

அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள் மொத்தம் ரூ.4,078.62 கோடி அளவிலான நிதியை ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இதில் ரூ.3,395.00 கோடி வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையான ரூ.683.62 கோடி மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

முற்பகல் 9-35

2009-2010 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் சட்டமன்றப் பேரவையில் 2009 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 17 ஆம் நாளன்று தாக்கல் செய்யப்பட்ட பின்னர், 'புதுப் பணிகள்'/ 'புதுத் துணைப் பணிகள்' குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட இனங்களுக்குச் சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், மேலும் இத்திட்டங்களுக்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்ட தொகையினை அந்நிதிக்கு ஈடு செய்வதும்தான் இந்தத் துணை மானியக் கோரிக்கையின் முக்கிய நோக்கமாகும். தமிழக மக்களின் நலனைக் கருத்திற்கொண்டே இத்தகைய சில புதிய செலவுப் பொறுப்புகள் இந்த அரசால் மேற்கொள்ளப்பட்டன.

'நிஷா' புயல் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் இழப்பீடு வழங்குவதற்காக, அரசு கூடுதலாக ரூபாய் 106.48 கோடி அனுமதித்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 5-வேளாண்மைத் துறை' என்பதன்கீழ் இத்தொகை துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

உணவுப் பொருட்களின் விலையேற்றத்தினால் ஏழை மற்றும் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாதவண்ணம், பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி மற்றும் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, சர்க்கரை மற்றும் பாமாயில் எண்ணெய் போன்ற அத்தியாவசிய பொருட்களை அதிக மானிய விலையில் வழங்குவதால், அரசின் உணவு மானியச் செலவு ரூபாய் 4,000 கோடியாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்காகக் கூடுதலாக ரூபாய் 1,200 கோடி அரசுக்குத் தேவைப்படுகிறது. இத்தொகை 'மானியக் கோரிக்கை எண் 13-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு நெல் கொள்முதல் செய்ய, அரசு குறுகிய காலக் கடனாக ரூபாய் 250 கோடி அனுமதிக்க உத்தேசித்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 13-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)' என்பதன்கீழ் இத்தொகை துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

உயிருக்கு ஆபத்தான பல கடும் நோய்களுக்கு ஆளாகும் ஏழை எளியோர், தனியார் மருத்துவமனைகளில் உயர் சிகிச்சையை இலவசமாகப் பெறுவதற்கான "உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்" என்ற திட்டத்தினை அரசு துவக்கியுள்ளது. இத்திட்டத்திற்கான காப்பீட்டுத் தொகையைச் செலுத்துவதற்காக, அரசு கூடுதலாக ரூபாய் 317.30 கோடி அனுமதித்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 19-மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை' என்பதன்கீழ் இத்தொகை துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், பல்வேறு வணிக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்காக வழிவகை முன்பணமாக அரசு ரூபாய் 98.57 கோடி அனுமதித்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை' என்பதன்கீழ் இத்தொகை துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், நான்காவது கட்டம் நிறைவடையும் நிலையில், ஐந்தாவது கட்டத்தின்கீழ் 40 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்குவதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. இதற்காக அரசுக்குக் கூடுதலாக ரூபாய் 250 கோடி தேவைப்படுகிறது. 'மானியக் கோரிக்கை எண் 31-தகவல் தொழில்நுட்பவியல் துறை' என்பதன்கீழ் இத்தொகை துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

நபார்டு வங்கியின் கடன் உதவியுடன், ரூபாய் 113.56 கோடி மதிப்பீட்டில் பேரூராட்சிகளிலுள்ள சாலைகளை மேம்படுத்த அரசு

ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக 'மானியக் கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை' என்பதன்கீழ் ரூபாய் 1 கோடி சேர்க்கப்பட்டுள்ளது. இந்த வருடத்திற்குத் தேவையான எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கம்மூலம் செலவு செய்யப்படும்.

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழர் முகாம்களில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், மேலும் அவர்களுக்கு நிலையான வீடுகளைக் கட்டித் தரவும் அரசு ரூபாய் 100 கோடி அனுமதி அளித்துள்ளது. இதற்காக 'மானியக் கோரிக்கை எண் 38-பொதுத் துறை' என்பதன்கீழ் ரூபாய் 37.33 கோடி துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த வருடத்திற்குத் தேவையான எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கம்மூலம் செலவு செய்யப்படும்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியினை ஒவ்வொரு தொகுதிக்கும் ரூபாய் 1.50 கோடியிலிருந்து ரூபாய் 1.70 கோடியாக உயர்த்தியதால், அரசு கூடுதலாக ரூபாய் 47 கோடி அனுமதித்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை' என்பதன்கீழ் இத்தொகை துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வூதியங்களுக்காகப் பல்வேறு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு வட்டியில்லா வழிவகை முன்பணமாக அரசு ரூபாய் 115 கோடி அனுமதித்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 48-போக்குவரத்துத் துறை' என்பதன்கீழ் இத்தொகை துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2010 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன். வணக்கம்.

[2010 ஜனவரி 11

[558 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

2009–2010 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

வ. எண்	கோரிக்கை	ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
1.	மாநிலச் சட்டமன்றம்	8,77	..	..
2.	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	4,26	..	..
3.	நீதி நிருவாகம்	15,04	..	..
4.	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	6,71,09	1,39,20	..
5.	வேளாண்மைத் துறை	246,50,91	14,95,03	..
6.	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)	10,30,00	17,00	..
7.	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)	82,18,91	51,25	..
8.	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)	2,39,80	..	..
9.	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	26,56,40	8,62,41	..
10.	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	2,37,66	..	..
11.	முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	16,69,00	..	..
12.	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	268,92,42	..	..

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

வ. எண்	கோரிக்கை	ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
13.	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	1,204,67,58	4,39,00	250,00,00
14.	எரிசக்தித் துறை	12,09,00	..	..
15.	சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை	1,60,83	33,03,72	..
16.	நிதித் துறை	1,08,76	..	..
17.	கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	..	3,70,78	2,12,70
18.	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	21,04,09	..	12,00,00
19.	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	328,04,63	10,00	..
20.	உயர் கல்வித் துறை	61,56,59	2,06,63	..
21.	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை	40,43	10	..
22.	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	10,73,10	1	..
23.	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	15,51,78	..	..
24.	சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	40,25	..	..

வ. எண்	கோரிக்கை	ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
25.	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்- நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	1,37,19	..	..
26.	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	26,74	..	98,56,54
27.	தொழில் துறை	440,69,25	..	40,65,29
28.	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	6,23,40	..	..
29.	சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை)	1,28,70	1,67,00	..
31.	தகவல் தொழில்நுட்பவியல் துறை	250,00,00	..	..
32.	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	3,76,83	2	..
34.	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	12,78,04	1,20,00	8,20,00
35.	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	42,60	..	..
36.	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	22,69	5,36,48	..
37.	மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	17,32	..	..
38.	பொதுத் துறை	47,23,60	2,73,01	..
39.	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	74,45	14	..

TRUTH ALONE TRIUMPHS LEGISLATIVE ASSEMBLY

2010 ஜனவரி 11]

வ. எண்	கோரிக்கை	ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
40.	பாசனம் (பொதுப் பணித் துறை)	6,03,38	3,01,10	..
41.	வருவாய்த் துறை	9,46	..	..
42.	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	136,89,56	47,00,02	..
43.	பள்ளிக் கல்வித் துறை	51,97,06	..	..
44.	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	1,75,00	15,15	..
45.	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	20,07	..	..
46.	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	1,22,02	..	..
47.	இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	1	..	..
48.	போக்குவரத்துத் துறை	..	..	142,00,00
49.	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	2,42,75	..	..
50	ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	3	..	..
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	92,17,81	..	..
	பெருமொத்தம்	3,378,59,26	130,08,05	553,54,53